# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.223/2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | மணிகண்டன் |
| Father's /Husband Name | : | கதிர்வேல் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 35 |
| Occupation | : | மதுவிலக்கு அமல்பிரிவு, நன்னிலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 24th day of February 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது நன்னிலம் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 10.11.2024 ந் தேதி மாலை 17.00 மணிக்கு எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியிலிருந்தபோது நானும் இரண்டாம் நிலைக்காவலர் வீரக்கதிரவன் என்பவரும் உதவி ஆய்வாளர் ராமமூர்த்தி ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக எரவாஞ்சேரி காவல் சரகத்திற்குட்பட்ட பகுதிகளில் கண்காணித்து வந்த போது மேலவயலூர் வடக்குத் தெரு பிள்ளையார் கோவில் அருகே கையில் துணிப்பையுடன் நின்றுகொண்டிருந்தவர் பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த சங்கர், த/பெ. மகாலிங்கம், வடக்குத் தெரு வயலூர் என்பவர் கையில் துணிப்பையுடன் போலீசாரைக் கண்டதும் தப்பிக்க முயன்றவரை பிடித்து அவர் நின்ற இடத்தை சோதனை செய்த போது 180 மி.லி பிடிக்கக்கூடிய Pondy jeffries brandy மதுபான பாட்டில்கள் 3 இருப்பது தெரிய வந்தது. அதை அவர் வைத்திருப்பதற்கு அனுமதியும், உரிமமும் இல்லாததாலும், தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் குற்ற காரணம் கூறி கைது மாலை 17.10 ணிக்கு செய்து எதிரி வசமிருந்த மதுபாட்டில்கள் 3 யும் கைப்பற்றுதல் மகசர் மூலமாக மாலை 17.20 மணிக்கு எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலமாக உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் வீரக்கதிரவன் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது

சாட்சி கையொப்பம் என்னுடையது, **சம்பவயிடத்தில் தயார் செய்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்கள் 3 யும் ஆய்வாளர் உத்தரவுப்படி மாலை 17.30 மணிக்கு பிரிவு 32TNP Act ன் கீழ் சம்பவயிடத்திலேயே கொட்டி அழித்தார். அதில் நானும் காவலர் வீரக்கதிரவன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த அழிப்பு மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 165/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் காவல் ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித பாண்டி மாநில மதுபான பாட்டில்களை, எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதில் காவல் ஆய்வாளர் எனது உயர் அதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கானது புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.24 16:01:10 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.